# **DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**MCOP No. 478/2023 MCOP No. 477/2023**
**& MCOP No. 476/2023**

சாட்சி -PW1

பெயர் -மதுமதி (எ)வருகுமதுமத

கணவர் பெயர் - வரகு தயாசாகர் ரெட்டி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07**.07.2026.**

(சாட்சிக்கு தெலுங்கு மட்டுமே எழுதப்படிக்க தெரியும் என்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் தெலுங்கில் சாட்சியிடம் கேட்டு சாட்சி தெலுங்கில் சொன்னதை திருமதி. சண்மூகபிரியா வழக்கறிஞர், சாட்சிக்கு சாட்சி தெலுங்கில் சொல்வதை சரியாக மொழிபெயர்த்து தமிழில் சொன்னார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு)**

ம.சா.ஆ.8 பாலிசி பேக்கேஜ் பாலிசி என்றால் சரிதான். பேக்கேஜ் பாலிசியில் 3 ஆம் தரப்பினர் மற்றும் காரில் பயணம் செய்வர்களுக்கும் மற்றும் கார் ஒட்டுனருக்கும், வாகன சேதத்திற்கும் மேற்படி ம.சா.ஆ.8 முன்னிலைக்கு விபத்து ஏற்பட்டால் காப்பீடு நிறுவனம் மேற்சொன்னவர்களுக்கு பேக்கேஜ் பாலிசிபடி நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் சரி.

எனது மகன் கார் ஒட்டினார், எனது மருமகள் எனது மகனுடன் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து வந்தார். எனது மகனுக்கு பின்னால் எனது கணவர் உட்கார்ந்து இருந்தார். எனது மருமகளுக்கு பின்னால் நான் உட்கார்ந்து இருந்தேன். எங்களுக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் நான் பாலிசிதாரர் ம.சா.ஆ.8 படி பேக்கேஜ் பாலிசி என்பதால் 3 ஆம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் சரி. எனக்கு 30 இலட்சம் நஷ்டயீடு தொகை மற்றும் எனது கணவருக்கு 50 இலட்சம், எனது மகனுக்கு 5 கோடி கோரியுள்ளோம் என்றால் சரிதான்.

எனது கணவருக்கு 50 இலட்சம் கோரிய இழப்பீடு தொகைக்கு அவருடைய வருமானம் குறித்தும், வேலை குறித்தும் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எனது கணவருக்கு கோரியுள்ள தொகைக்கு வருமான வரி கணக்கிலும், அவருக்கு அவ்வளவு வருமானம் ஈட்டியதாக காணப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் விவசாயம் , ரியல் எஸ்டேட் செய்து வருகிறார் என்பதற்கு எத்தகைய ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது மகன் சித்தூர் அப்போலோ மருத்துவமனையில் ம.சா.ஆ.41 அசல் வருமான மற்றும் பணி அனுபவ சான்றிதழை உரிய மருத்துவமனை அலுவலர்களை வைத்து நிருபணம் செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் எவ்வித நஷ்டயீடு கொடுக்க தேவையில்லை என்றும் 3 ஆம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்க பொறுப்பாவர்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. எவ்வித முறையான சேத மதிப்பு இடாமல் அதிகப்படியாக நஷ்டயீடு கோரியுள்ளேன் என்றும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களை பொறுத்து எங்களது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

விபத்து சமயம் ஸ்விப்ட் கார் AP 39 FD 4146 ல் பயணம் செய்தேன் என்றால் சரி. அந்த வாகனத்தை எனது மகன் தான் ஒட்டினார். எனது மகன் சாலை விதிகளை பின்பற்றி மெதுவாக, இடது பக்க ஒரம் காரை ஒட்டினார். எனது மகனுக்கு கார் ஒட்டுவதற்கு ஒட்டுனர் உரிமம் உள்ளது. மேற்படி காருக்கும் ஆவணம் முறையாக உள்ளது. எங்களது காருக்கு எதிரே வந்த முதல் எதிர்மனுதாரர் Eicher Maxi Cab Van ஒட்டுனர் தான் அஜாக்கிரைதையாகவும், கவனகுறைவாகவும் ஒட்டி எங்கள் கார் மீது மோதிவிட்டார். அதனால் முதல் எதிர்மனுதாரர் உரிமையாளரும், அதன் காப்பீடு நிறுவனம் தான் எங்களுக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் சரி. எனது மகன் காரை முறையாக ஒட்டியதால் காரின் உடைய காப்பீடு நிறுவனமான 3 ஆம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்டயிடும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் தான் காரின் உரிமையாளர் என்றால் சரி. காரின் உரிமையாளர் நான் என்பதால் நான் 3 ஆம் தரப்பினர் கிடையாது என்பதால் எனக்கு 3 ஆம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்டயீடும் எனக்கு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் என்னுடைய வேலை, வருமானம் நான் முறையாக ஆவணம் சமர்பிக்க வில்லை என்றும், வருமான வரி அலுவலரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள்

முழுமையாக குணமடைந்து விட்டது என்றும், எனக்கு எவ்வித ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. 3ஆம் எதிர்மனுதாரர் ஒரு சம்பிரதாய தரப்பினர் என்பதால் அவரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எது எவ்வாறு ஆயினும் அதிகப்படியான தொகைக்கு இழப்பீடு கோரியிருப்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 07th 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.08 14:40:07 +0600

Additional District Judge(FTC),
Vellore.